**8** **மற்ற அனைத்தும். உங்கள் விசா காலாவதியாவதற்கு முன் நீங்கள் நியூசிலாந்தை விட்டு வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றத்தை சந்திக்க வேண்டியிருக்கும்.**

நீங்கள் மருத்துவ சிகிச்சைக்காக அல்லது ஆலோசனைக்காக நியூசிலாந்துக்கு வருகிறீர்களா அல்லது பிரசவத்திற்காக வருகிறீர்களா? ○ ஆம் ○ இல்லை

**ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுங்கள்** என்னிடம் தற்காலிக நுழைவு வகை விசா உள்ளது. (பெரும்பாலான உல்லாச மற்றும் சரக்கு கப்பல் பயணிகள் இந்த விருப்பதேர்வை தேர்ந்தெடுக்க வேண்டும்). ○ ஆம்

**அல்லது** என்னிடம் விசா இல்லை மற்றும் நான் வருகையின்போது ஒரு வருகையாளர் விசாவிற்காக விண்ணப்பிக்கின்றேன். ○ ஆம்

**9** 12 மாதங்கள் அல்லது அதற்கு மேலாக சிறைத்தண்டனைப் பெற்றருக்கிறீர்களா அல்லது ஏதேனும் நாட்டில் இருந்து ஏதேனும் நேரத்தில் நாடு கடத்தப்பட்டிருக்கிறீர்களா, அகற்றப்பட்டிருக்கிறீர்களா அல்லது விலக்கப்பட்டிருக்கிறீர்களா? ○ ஆம் ○ இல்லை

**10** **நான் கொடுத்த தகவல்கள் உண்மையானது, சரியானது மற்றும் முழுமையானது என்று உறுதிப்படுத்துகிறேன்.**

கையொப்பம் ______ தேதி __ / __ / __

(18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் எனில் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் தேவை)

சுங்கம், குடியமர்வு, தொற்று பாதுகாப்பு, எல்லை பாதுகாப்பு, சுகாதாரம், வனவிலங்குகள், காவல்துறை, அபராத அமலாக்கம், நீதி, சலுகைகள், சமூக சேவைகள், தேர்தல், உள்நாட்டு வருவாய், மற்றும் நாணய சட்டங்களை நிர்வகிப்பதற்காக உங்கள் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இது எல்லை பாதுகாப்பு அமைப்புகள் தங்களின் சட்டப்பூர்வ செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவைப்படுகிறது. தரவு பொருத்தத்தை உள்ளடக்கிய காரணங்களுக்காக, சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட பிற ஏஜென்சிகளுக்கு இது வெளியிடப்படலாம். புள்ளியியல் நோக்கங்களுக்காக ஸ்டாடிஸ்டிக்ஸ் நியூசிலாந்தினால் இந்த தகவல்கள் பயன்படுத்தப்படலாம்.

இந்த ஏஜென்சிகள் உங்கள் தகவலை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதைப் பற்றிய கூடுதல் தகவலை நீங்கள் www.travellerdeclaration.govt.nz/privacy இல் பார்வையிடலாம் அல்லது கீழே உள்ள தொடர்பு விருப்பங்களைப் பயன்படுத்தலாம்.

தனிப்பட்டத் தகவல்களை அணுக மற்றும் திருத்தம் செய்ய இரகசியத்தன்மை சட்டம் 2020 உரிமை வழங்குகிறது. இந்த உரிமைகளை பயன்படுத்த தயவுசெய்து நியூசிலாந்து சுங்க சேவையை 0800 428 786 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது privacyrequest@customs.govt.nz என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் மற்றும்/அல்லது தபால் பெட்டி எண் 1473, வெலிங்டன் என்ற முகவரியிலுள்ள நியூசிலாந்து குடியமர்வுக்கு கடிதம் அனுப்புங்கள்.



# New Zealand Traveller Declaration | Whakapuakanga Tangata Haere ki Aotearoa

OCTOBER 2023

- இப்பிரகடனம் ஒரு சட்டப்பூர்வ ஆவணம் - பொய்யான பிரகடனங்கள் உடமைகள் பறிமுதல் உட்பட தண்டனைகள், $400 குறைந்தபட்ச உடனடி அபராதம், விசாரணை, சிறை, மற்றும் நியூசிலாந்திலிருந்து வெளியேற்றப்படுதல் போன்ற தண்டனைகளுக்கு வழிவகுக்கலாம். ஒவ்வொரு பயணியும் ஒரு தனி பிரகடனத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.
- தயவுசெய்து இதை போன்று ஆங்கிலத்தில் விடையளியுங்கள் மற்றும் பெரிய எழுத்தில் பிரிண்ட் செய்யுங்கள்: NEW ZEALAND அல்லது விடைகளை இது போன்று குறியுங்கள்: ✓
- நீங்கள் நியூசிலாந்தில் நிரந்தரமாக இருக்க போகிறீர்கள் என்றால் அனைத்து பிரிவுகளையும் பூர்த்தி செய்யுங்கள். மற்ற பயணிகளுக்கு பிரிவுகள் 5, 7, 8 மற்றும் 9 கட்டாயமல்ல. கட்டாயமில்லாத விடைகள் எல்லை அபாயத்தை மேலாண்மை செய்ய பயன்படுத்தப்படலாம்.

**1**

கப்பலின் பெயர் ______

நீங்கள் கப்பலில் புறப்பட்ட வெளிநாட்டு துறைமுகம் ______

பாஸ்போர்ட் எண் ______

பாஸ்போர்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டினம் ______

குடும்பப் பெயர் ______

அழைக்கப்படுகிற அல்லது முதல் பெயர்கள் ______

பிறந்த தேதி நாள் __ மாதம் __ ஆண்டு ____

பிறந்த நாடு ______

தொழில் அல்லது வேலை ______

நியூசிலாந்தில் உள்ள முழு தொடர்பு அல்லது குடியிருப்பு முகவரி ______

மின்னஞ்சல் ______

தொலைபேசி எண் ______



மேலும் கேள்விகளுக்கு பக்கத்தை திருப்புங்கள் ➡

## 2a நீங்கள் நியூசிலாந்தில் வசித்தால் இந்த கேள்விகளுக்கு பதில் அளியுங்கள் இல்லையென்றால் 2b-க்கு செல்லவும்.

அயல்தேச பயணத்தின் போது எந்த நாட்டில் அதிக காலம் செலவிட்டீர்கள்?

உங்கள் பயணத்திற்கான முக்கிய காரணம் என்ன?

- நண்பர்கள்/உறவினர்களை சந்திக்க
- வணிக
- விடுமுறை/சுற்றுலா
- மாநாடு/கருத்தரங்கம்
- கல்வி
- மற்றவை

அடுத்த 12 மாதங்களுக்கு எந்த நாட்டில் பெரும்பாலும் நீங்கள் வசிப்பீர்கள்?

- நியூசிலாந்து
- மற்றவை

## 2b நீங்கள் நியூசிலாந்தில் வசிக்கவில்லையென்றால் இந்த கேள்விக்கு பதில் அளியுங்கள்.

நீங்கள் நியூசிலாந்தில் எவ்வளவு காலம் தங்கியிருக்க எண்ணியுள்ளீர்கள்?

நிரந்தரமாக **அல்லது** ஆண்டுகள் மாதங்கள் நாட்கள்

நீங்கள் நிரந்தரமாக தங்கப்போவதில்லை என்றால் நியூசிலாந்தில் உங்கள் வருகைக்கான முக்கிய நோக்கம் என்ன?

- நண்பர்கள்/உறவினர்களை சந்திக்க
- வணிக
- விடுமுறை/சுற்றுலா
- மாநாடு/கருத்தரங்கம்
- கல்வி
- மற்றவை

எந்த நாட்டில் கடைசியாக 12 மாதங்கள் அல்லது அதற்கு மேல் வசித்தீர்கள்?

மாநிலம், மாகாணம் அல்லது மாகாண அதிகார எல்லை

அஞ்சல் குறியீடு

## 3

கடந்த 30 நாட்களில் நீங்கள் வருகை தந்த நாடுகளை பட்டியலிடவும்:

## 4

உங்கள் பையின் உள்ளடக்கங்கள் உங்களுக்குத் தெரியுமா? ஆம் இல்லை

## 5 நியுசிலாந்திற்குள் நீங்கள் இவற்றை கொண்டு வருகிறீர்களா?

- **ஏதேனும் உணவு:** சமைக்கப்பட்ட, சமைக்கப்படாத, புதிதான, பதப்படுத்தப்பட்ட, பேக்கேஜ்டு அல்லது உலரவைக்கப்பட்ட உணவு? ஆம் இல்லை
- **விலங்குகள் அல்லது விலங்கு பொருட்கள்:** இறைச்சி, பால் பொருட்கள், மீன், தேன், தேனீ பொருட்கள், முட்டைகள், இறகுகள், ஓடுகள், கச்சா கம்பிளி, தோல்கள், எலும்புகள் அல்லது பூச்சிகள் உட்பட? ஆம் இல்லை
- **தாவரங்கள் அல்லது தாவரத் தயாரிப்புகள்:** பழங்கள், பூக்கள், விதைகள், வேர் கனிகள், மரம், பட்டை, இலைகள், கொட்டைகள், காய்கறிகள், தாவரங்களின் பகுதிகள், பூஞ்சை, மூங்கில் கழி, மூங்கில் அல்லது வைக்கோல், மத வழிபாட்டிற்கோ அல்லது மருந்து பயன்பாட்டிற்காகவோ உட்பட? ஆம் இல்லை



**தொற்றுபாதுகாப்பிற்கு இடர் விளைவிக்கும் பிற பொருட்கள் உட்பட:**

- விலங்கு மருந்துகள், உயிரியல் மாதிரிகள், நுண்ணுயிர்கள், மண் அல்லது நீர்? ஆம் இல்லை
- விலங்குகள், தாவரங்கள் அல்லது தண்ணீருடன் பயன்படுத்தப்படும் உபகரணங்கள்/ஆடை தோட்டக்கலை, தேனீ வளர்ப்பு, மீன்பிடித்தல், நீர் விளையாட்டு அல்லது டைவிங் நடவடிக்கைகள் உட்பட? ஆம் இல்லை
- பாதணிகள், கூடாரங்கள், முகாம், வேட்டையாடுதல், நடைபயணம், கோல்ஃப் அல்லது விளையாட்டு உபகரணங்கள் உட்பட வெளிப்புற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்? ஆம் இல்லை

கடந்த 30 நாட்களில் (நியூசிலாந்திற்கு வெளியே இருக்கும்போது) நீங்கள் ஏதேனும், காட்டுப் பகுதிகளுக்குச் சென்றிருக்கிறீர்களா, (வீட்டுப் பூனைகள் மற்றும் நாய்களைத் தவிர) விலங்குகளுடன் தொடர்பு கொண்டீர்களா அல்லது விலங்குகள் அல்லது தாவரங்களை வளர்க்கும் அல்லது செயல்முறைக்குள்ளாக்கும் இடங்களுக்கு சென்றிருக்கிறீர்களா? ஆம் இல்லை

## 6 நியுசிலாந்திற்குள் நீங்கள் இவற்றை கொண்டு வருகிறீர்களா?

- **மருந்து:** 3 மாதங்களுக்கு மேலான தேவைப்பாட்டு மருந்துகளோ அல்லது உங்களுக்குப் பரிந்துரைக்கப்படாத மருந்துகளோ? ஆம் இல்லை
- **கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பொருட்கள்:** உதாரணமாக, ஆயுதங்கள், நாகரீகமற்ற மஞ்சரிகள், அருகி வரும் தாவரங்கள் அல்லது வனவிலங்குகள், சட்டவிரோதமான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட போதைப்பொருட்கள்? ஆம் இல்லை
- **மது:** 3க்கும் அதிகமான சாராய பாட்டில்கள் (ஒவ்வொன்றும் 1.125 லிட்டருக்கு மிகாமல் இருப்பது) மற்றும் 4.5 லிட்டர்கள் ஒயின் அல்லது பீர்? ஆம் இல்லை
- **புகையிலை:** 50 சிகரெட்டுகள் அல்லது 50 கிராம்களுக்கு அதிகமான புகையிலை தயாரிப்புகள் (சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைத் தயாரிப்புகளின் கலவையை உள்ளடக்கியது)? ஆம் இல்லை
- **வெளிநாட்டில் இருந்து பெறப்பட்டப் பொருட்கள் மற்றும்/அல்லது நியூசிலாந்தில் வரியின்றி வாங்கப்பட்ட பொருட்கள்:** மொத்த மதிப்பு NZ$700 க்கு அதிகமாக (பரிசுகளை உள்ளடக்கியது)? ஆம் இல்லை
- **வர்த்தக அல்லது வணிகப் பயன்பாட்டுக்காக எடுத்துச் செலலப்படும் சரக்குகள்?** ஆம் இல்லை
- **மற்றொரு நபருக்காக எடுத்து செல்லப்படும் சரக்குகள்?** ஆம் இல்லை
- **பணம்:** பயணியர் காசோலைகள், வங்கி வரைவோலைகள், பண ஆணைகள், மற்றும் பிறவற்றை உள்ளிட்டு NZ$10,000 அல்லது அதற்கும் அதிகம் (அல்லது வெளிநாட்டு பணத்திற்கு சமம்) ஆம் இல்லை

## 7

உங்களிடம் ஒரு நடப்பிலுள்ள நியூசிலாந்து பாஸ்போர்ட் அல்லது குடியுரிமை வகை விசா உள்ளதா? ஆம் என்றால் **10** க்கு செல்லவும். ஆம் இல்லை

நீங்கள் வெளிநாட்டு பாஸ்போர்ட் பயன்படுத்தும் நியூசிலாந்து பிரஜையா? ஆம் என்றால் **10** க்கு செல்லவும். ஆம் இல்லை

உங்களை வெளிநாட்டிலிருந்து ஆஸ்திரேலியா திரும்பிசெல்ல அனுமதிக்கும் ஆஸ்திரேலிய பாஸ்போர்ட் அல்லது நிரந்தர குடியுரிமை விசா உங்களிடம் உள்ளதா? ஆம் எனில் **9** க்கு செல்க. ஆம் இல்லை



**தயவு செய்து மேலும் கேள்விகளுக்கும் கையொப்பமிடுவதற்கும் பக்கத்தை திருப்பவும்.**